
Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
College House
Annameenakshi Restaurant (Veg.)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
2, Town Hall Road, Madurai-625 001.




| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை | 201 | உள்ளூர் - 20.07.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue | 201 | வெளியூர் - 21.07.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

ஜாதகம் படி திருமணம் எப்படி அமையும்?

மத்திய அரசு ONGC-யில் 52 பணியிடங்கள்!

உலகை அதிரவைத்த அமெரிக்க தாக்குதல்!

ரஷ்யாவை உலுக்கிய உக்ரைன்!




ஜனாதிபதி திரவுபதி முர்மு தனது ஐரோப்பிய சுற்றுப்பயணத்தின் முதல் கட்டமாக இன்று மால்டோவா நாட்டை சென்றடைந்தார். இந்திய ஜனாதிபதி ஒருவர் மால்டோவாவுக்கு மேற்கொள்ளும் முதல் அரசுமுறைப் பயணம் இதுவாகும்.

## விண்வெளி துறையில் வானளாவிய வளர்ச்சியை இந்தியா தொட்டுள்ளது - பிரதமர் மோடி!

புதுடெல்லி, ஜூலை. 20–

நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் மோடி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது நாடாளுமன்றத்தில் முக்கிய மசோதாக்கள் தாக்கலாக உள்ள நிலையில் எதிர்க்கட்சிகளுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். பிரதமர் மோடி கூறியதாவது:




* நாடாளுமன்ற கூட்டத்தொடர் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன்.
* நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமானதாக அமையும் என நம்புகிறேன்.
* நாட்டின் வளர்ச்சிக்கு நாடாளுமன்ற கூட்டத்தொடர் மிகவும் அவசியமானது.
* விண்வெளித்துறையில் வானளாவிய வளர்ச்சியை இந்தியா தொட்டுள்ளது.
* விக்ரம் 1 ராக்கெட் வெற்றியை அடுத்து தனியார் நிறுவனத்தை சேர்ந்த இளைஞர்களுக்கு பாராட்டுகள்.
* இந்திய இளைஞர்களின் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மிகப்பெரிய சாதனை படைத்துள்ளது.
* சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் ரெயிலை இந்தியா அறிமுகம் செய்துள்ளது.
* உலகின் எந்த போர்களும் இந்தியாவின் வளர்ச்சியை தடுக்க முடியாது.
* நாட்டில் 3–வது செமி கண்டக்டர் ஆலை அமைய உள்ளது.
* நாடாளுமன்ற கூட்டத்தொடர் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன்.
* இந்தியாவில் இது இளைஞர்களுக்கான காலம். 56 வயது இளைஞர் என கூறி கொள்பவருக்கான காலம் இது இல்லை என ராகுலை மறைமுகமாக பிரதமர் மோடி விமர்சித்தார்.

## அமளி: நாடாளுமன்ற அவைகள் ஒத்திவைப்பு!

புதுடெல்லி, ஜூலை. 20–



நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்பே எதிர்க்கட்சிகள் பல்வேறு பிரச்சனைகளை முன்னிருத்தி போர்க்கோலம் பூண்டது. அவை கூடிய சில நிமிடங்களிலேயே எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொடர் முழக்கங்கள் மற்றும் அமளி காரணமாக மக்களவை, மாநிலங்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

**ஒத்திவைப்பு**

நீட் தேர்வு சர்ச்சை மற்றும் அயோத்தி ராமர் கோவில் அறக்கட்டளை நிதி முறைகேடு புகார் குறித்து விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் இந்தச் சலசலப்பில் ஈடுபட்டன.

மக்களவை தொடங்கியதும், சபாநாயகர் ஓம் பிர்லா முன்னாள் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரங்கல் குறிப்புகளை வாசித்தார்.

இரங்கல் குறிப்புகள் வாசித்து முடிக்கப்பட்ட உடனே, நீட் தேர்வு முறைகேடுகள் மற்றும் அயோத்தி ராம ஜன்மபூமி அறக்கட்டளையின் நிதி மோசடிப் புகார் குறித்து உடனடியாக விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்க்கட்சி எம்பிக்கள் முழக்கங்களை எழுப்பினர்.

அவையின் அமளிக்கு இடையே, சபாநாயகர் ஓம் பிர்லா உறுப்பினர்களை அமைதி காக்குமாறு தொடர்ந்து வேண்டுகோள் விடுத்தார்.

எனினும், முழக்கங்கள் தொடர்ந்ததால் சபாநாயகர் அவையை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைப்பதாக அறிவித்தார். இதேபோல மாநிலங்களவையும் ஒத்திவைக்கப்பட்டது.

**காங்கிரஸ் குற்றச்சாட்டு**

இது குறித்துசெய்திலாயர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்.பி கௌரவ் கோகோய், "மக்களுக்குத் தேவையான அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க அரசு தயாராக இல்லை என்பது கடந்த சில நாட்களாகவே தெளிவாக புலப்படுகிறது.

ராமர் கோவில் விவகாரமோ அல்லது நீட் விவகாரமோ நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுமா என்பதை அவர்களால் இதுவரை உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

இந்த மழைக்கால கூட்டத்தொடரின் முக்கியப் பிரச்சினைகள் இவைதான் என்பது ஒட்டுமொத்த நாட்டுக்கும் தெரியும், ஆனால் அரசிடம் முறையான திட்டம் இல்லை" என்று குற்றம் சாட்டினார். முன்னதாக, காங்கிரஸ் எம்பி கே.சி. வேணுகோபால், ராமர் கோவில் அறக்கட்டளையின் நிதி மோசடிப் புகார் குறித்து விவாதிக்க மக்களவையில் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸை வழங்கியிருந்தார்.

அதேபோல், பல எதிர்க்கட்சித் தலைவர்களும் நீட் வினாத்தாள் கசிவு மற்றும் மாணவர்களின் போராட்டங்கள் குறித்து விவாதிக்கக் கோரி நோட்டீஸ் அளித்திருந்தனர்.

**ஜந்தர் மந்தரில் குழப்பம்**

இதனையே இன்று பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கி உள்ள சூழலில் ஜந்தர் மந்தரில் இருந்து பாராளுமன்றம் நோக்கி பேரணி சென்று தங்கள் கோரிக்கை மனுக்களை வழங்க கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் இந்த பேரணிக்கு நேற்றே தடை விதிக்கப்பட்டு அங்கு போலீசார் மற்றும் மத்திய படையினர் குவிக்கப்பட்டனர்.

இந்த சூழலில் பாராளுமன்றம் நோக்கி பேரணியை தொடங்க முனைப்பு காட்டிய டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டக்காரர்கள் மீது டெல்லி போலீசார் மற்றும் மத்திய படையினர் தடியடி நடத்தியுள்ளனர்.

## உலக சதுரங்க நாள் - முதலமைச்சர் விஜய் வாழ்த்து!

சென்னை, ஜூலை. 20–



உலக சதுரங்க நாளான இன்று முதலமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

உலக சதுரங்க நாளை முன்னிட்டு சதுரங்கத்தை நேசிக்கும் அனைத்து வீரர், வீராங்கனைகளுக்கும், பயிற்சியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான இளம் கிராண்ட் மாஸ்டர்களை உருவாக்கி தமிழ்நாடு சாதனை படைத்து வருகிறது. 1988 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் தொடங்கி, குகேஷ், பிரக்ஞானந்தா, செல்வி வைஷாலி உள்ளிட்ட பல இளம் கிராண்ட் மாஸ்டர்கள் சர்வதேச அளவிலான சதுரங்கப் போட்டிகளில் வெற்றிபெற்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்து வருகின்றனர். அவர்களுக்கு இந்நாளில் எனது நல்வாழ்த்துகள்.

உலக அரங்கில் சதுரங்கத்தின் தலைநகராக தமிழ்நாடு முன்னேறி வரும் நிலையில், இளைய தலைமுறையினர் சதுரங்க நுட்பங்களைக் கற்றுத்தேர்ந்து, சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று, தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்திட வேண்டும். இத்தகைய முயற்சிகளுக்கு நமது அரசு அனைத்து வகையிலும் துணை நின்று எல்லா உதவிகளையும் வழங்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றம் நோக்கி முற்றுகை!

# போராட்டக்காரர்கள் மீது போலீஸ் தடியடி!

# டெல்லி முழுவதும் பரபரப்பு...

## மெட்ரோ நிலையங்கள் மூடல்!!



புதுடெல்லி, ஜூலை 20–

நீட் உள்ளிட்ட தேசியத் தேர்வுகளில் நடந்ததாக கூறப்படும் முறைகேடுகள் மற்றும் வினாத்தாள் கசிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் ஜந்தர் மந்தரில் இருந்து நாடாளுமன்றம் நோக்கி பேரணியாக செல்ல முயன்றனர். பேரணிக்கு அனுமதி வழங்கப்படாததால், போராட்டக்காரர்களை தடுக்க டெல்லி காவல்துறை லேசான தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கியுள்ள நிலையில், பாதுகாப்பு காரணங்களுக்காக நாடாளுமன்றம் மற்றும் ஜந்தர் மந்தர் பகுதிகளில் பல அடுக்கு போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. விரைவு அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது. போராட்டக்காரர்கள் கண்ணீர் புகை மற்றும் தடியடி நடத்தி போலீசார் விரட்டியடித்தனர். இவ்வாறு விரட்டியடிக்க பின் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு வாயிலாக மீண்டும் திறக்கப்பட்டது.

பேரணியை முன்னிட்டு டெல்லி மெட்ரோ நிர்வாகம் பாதுகாப்பு நடவடிக்கையாக ஐந்து மெட்ரோ நிலையங்களை தற்காலிகமாக மூடியது. மேலும், ஜந்தர் மந்தர் மற்றும் நாடாளுமன்ற வளாகத்தைச் சுற்றிய பகுதிகளில் இணைய சேவையும் கட்டுப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக புது டெல்லியின் பல்வேறு முக்கிய சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.


புது டெல்லி மாவட்டம் முழுவதும் பிஎன்எஸ்எஸ் சட்டத்தின் பிரிவு 163–ன் கீழ் தடை உத்தரவு அமலில் இருப்பதாக காவல்துறை தெரிவித்தது.

ஜந்தர் மந்தரைத் தவிர வேறு எந்த இடத்திலும் பேரணி, ஆர்ப்பாட்டம் அல்லது ஐந்துக்கும் மேற்பட்டோர் கூடுவதற்கு அனுமதி இல்லை என்றும், விதிமீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை நோக்கி முற்றுகையிட செல்வதாக அறிந்த போலீசார் அந்த பகுதியையும் மூடினர். இதனால் ரிசர்வ் வங்கியின் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

இதற்கிடையில், போராட்டக்காரர்கள் மீது காவல்துறை தடியடி நடத்திய காட்சிகளை பகிர்ந்த கரப்பான்பூச்சி ஜனதா கட்சி, "அமைதியான ஜனநாயக போராட்டத்தை ஒடுக்க முயற்சிக்கிறார்கள்; இதை உலகமே பார்த்துக் கொண்டிருக்கிறது" என்று குற்றம்சாட்டியுள்ளது.

நீட் விவகாரத்தை மையமாகக் கொண்டு நடைபெற்ற இந்தப் போராட்டம், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாளிலேயே தேசிய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற கார் உற்பத்தி நிறுவனமான ஃபோர்டு நிறுவனத்தின் துணைத் தலைவர் மேத்யூ கோட்லெவ்ஸ்கி (Thiru. Mathew God–lewski), நிர்வாக இயக்குநர் திருமதி சிமோனெட்டா வெர்டி (Ms. Simonetta Verdi), ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவு இயக்குநர் தீரஜ் தீக் ஷித், Country Director முனைவர் ஸ்ரீபாத் பட், இயக்குநர் வி. ராஜா விமல குமார் ஆகியோர் சந்தித்துப் பேசினர். உடன் தொழில் துறை அமைச்சர் செல்வி எஸ். கீர்த்தனா உள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 20.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 04-ம் தேதி

# பணப் பாதுகாப்பில் புதிய அத்தியாயம்!



இந்திய ரூபாய் நோட்டு வரலாற்றில் மிகப்பெரிய மாற்றமாக, காகித ரூபாய் நோட்டுகளுக்குப் பதிலாக பாலிமர் (பிளாஸ்டிக்) ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையை இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரப்பூர்வமாக தொடங்கியுள்ளது. இதற்காக, பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய பாலிமர் தாள்களை தயாரிக்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து ஆகஸ்ட் 18–க்குள் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொடக்க கட்டமாக இரண்டு வகை ரூபாய் நோட்டுகளுக்காக 68,000 ரீம் பாலிமர் தாள்கள் வாங்கப்படவுள்ளன. சோதனை வெற்றிகரமாக முடிந்தால், நாடு முழுவதும் பாலிமர் நோட்டுகள் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும்.

இந்த டெண்டரில் தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதால், விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் இந்திய அரசின் பாதுகாப்பு அனுமதி பெற்றிருக்க வேண்டும். மேலும், சீனா அல்லது பாகிஸ்தானுடன் தொடர்புடைய உற்பத்தி மற்றும் மூலப்பொருட்கள் இந்த திட்டத்தில் இடம்பெறக் கூடாது என்ற கடுமையான நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. காகித நோட்டுகளை விட பாலிமர் நோட்டுகள் பல மடங்கு உறுதியானவை; தண்ணீர், ஈரப்பதம், அழுக்கு, தேய்மானம் மற்றும் கிழிவால் எளிதில் சேதமடையாது. இதனால் அவற்றின் பயன்பாட்டு ஆயுட்காலம் நீளும்; புதிய நோட்டுகளை அடிக்கடி அச்சிட வேண்டிய அவசியம் குறைவதால் அரசின் அச்சிடும் செலவும் கணிசமாகக் குறையும். அதேநேரத்தில், வெளிப்படையான பாதுகாப்பு சாளரம், நுண்ணெழுத்து, ஹோலோகிராம், சிறப்பு பாதுகாப்பு அம்சங்கள் போன்றவற்றை இணைக்க முடிவதால் போலி ரூபாய் நோட்டுகளை தயாரிப்பது மிகவும் கடினமாகும்.

இதன் மூலம் இந்திய நிதி அமைப்பின் பாதுகாப்பு மேலும் வலுப்பெறுவதுடன், கள்ளநோட்டு புழக்கம், தீவிரவாத நிதியுதவி, எல்லை தாண்டிய போலி நாணய வலையமைப்புகள் மற்றும் இந்திய பொருளாதாரத்தை பாதிக்க எதிரி நாடுகள் மேற்கொள்ளக்கூடிய கள்ளநோட்டு முயற்சிகளுக்கும் கூடுதல் தடையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. டிஜிட்டல் பரிவர்த்தனைகள் வேகமாக வளர்ந்தாலும், இந்தியாவில் ரொக்கப் பணத்தின் தேவை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பாதுகாப்பு, நீடித்த பயன்பாடு மற்றும் செலவுக் குறைப்பு ஆகிய மூன்று முக்கிய நோக்கங்களுடன் பாலிமர் ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்தும் ரிசர்வ் வங்கியின் இந்த முயற்சி, இந்திய பணப் பரிவர்த்தனை வரலாற்றில் புதிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.



அதிமுக திருப்பூர் மாநகர மாவட்ட நெருப்பெரிச்சல் பகுதி கழக 5_வது வட்டக் கழக நிர்வாகிகள் அறிமுக ஆலோசனை கூட்டம் 5_வார்டு செயலாளர் கோவிந்தராஜ் தலைமையில் பகுதி செயலாளர் நாச்சிமுத்து முன்னிலையில் நடைபெற்றது இதில் புதிதாக பொறுப்பேற்ற மாநகர் மாவட்ட செயலாளர் வேல் குமார் சாமிநாதன், கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இந்த நிகழ்வில் எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் பட்டு கவுண்டர், 5 வார்டு கவுன்சிலர் இந்திரா ராணி ஆனந்தன், மற்றும் பகுதி கழகத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் மாநகர் மாவட்ட நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் பங்கேற்றனர் முன்னதாக கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியில் இருந்து நிர்வாகி சேகர் அவர்கள் அதிமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார்.

## மக்கள் நல அமைப்பு செயற்குழு பொதுக்குழு கூட்டம்!



பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர் மக்கள் நல அமைப்பு தலைமை அலுவலக திறப்பு விழா மற்றும் செயற்குழு பொதுக்குழு கூட்டம் நிறுவனத் தலைவர் அழகுராஜா தேவர் தலைமையில் கே வி ஆர் நகர் பகுதியில் நடைபெற்றது. இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன நிர்வாகிகள் மலைச்சாமி தேவர் மாநில பொதுச் செயலாளர். மாநில ஒருங்கிணைப்பாளர் செல்வகுமார், கொங்கு மண்டல செயலாளர் செல்வம்,வடக்கு மாவட்ட செயலாளர் சிவமுருகன். மாநில இளைஞர் அணி பொதுச் செயலாளர் பாண்டி. மாநில இளைஞரணி செயலாளர் ரமேஷ். தகவல் தொழில்நுட்ப பிரிவு கந்தவேல், மற்றும் நிர்வாகிகள் தங்கபாண்டி, ராஜாங்கம், மணிகண்டன், கார்த்திஸ்வரன்,அஜித். அழகேஷ், கார்த்திகுமார்,செல்வம், வெள்ள பாண்டி, அரவிந்த், மணி,அஜய், கோவிந்தசாமி, ஆனந்தகுமார், கோபிநாத், செந்தில், விஜயகுமார், உள்ளிட்ட நிர்வாகி 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

# பழனி கோவில் நிலம் அபகரிக்கப்பட்டது எப்படி?



பழனி, ஜூலை. 20–

பழனி கோவில் நிலம் அபகரிக்கப்பட்டது எப்படி? என்பது குறித்த தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பத்திரத்தில் கூறப்பட்டிருப்பதாவது:– ரூ.100 கோடி மதிப்பிலான நிலம் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் தண்டபாணி மடம் தனியார் அறக்கட்டளை என குறிப்பிடப்பட்டுள்ளது. தண்டபாணி மடத்திற்கு சொந்தமான நிலங்கள் மூலம் வருவாய் ஈட்டி தர்மகாரியங்கள் செய்வது வழக்கம் என பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. ரூ.100 கோடி மதிப்பிலான நிலம் மூலம் எதிர்பார்த்த வருவாய் கிடைக்காத காரணத்தினால் விற்பனை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூ.100 கோடி நிலத்தை ரூ.2 கோடிக்கு கேட்டுள்ளதே அதிக விலை எனவும் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த மார்ச் 27–ம் தேதி கையெழுத்தான விற்பனை பத்திரம் ஜூன் 6–ம் தேதி பழனி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# தமிழக காங்கிரசுக்கு விரைவில் புதிய நிர்வாகிகள்!



சென்னை, ஜூலை. 20–

தமிழக காங்கிரசுக்கு புதிய மாவட்ட தலைவர்களை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நேரடியாக தேர்வு செய்தது. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட 77 மாவட்ட தலைவர்களுக்கும் 10 நாட்கள் பயிற்சி வழங்கப்படுகிறது. இந்த பயிற்சி முகாம் வருகிற 23–ந்தேதி முதல் 1–ந்தேதி வரை மகாபலிபுரத்தில் நடக்கிறது. முகாம் நடைபெறும் 10 நாட்களில் ஏதாவது ஒரு நாள் ராகுல் காந்தியும் கலந்து கொள்வார் என்று கூறப்படுகிறது.

இந்த பயிற்சி முகாம் முடிந்ததும் வட்டார, நகர, பேரூர் தலைவர்களை தேர்வு செய்ய திட்டமிட்டு உள்ளார்கள். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பார்வையாளர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் ஒவ்வொரு வட்டார அளவிலும் நேரில் சென்று விசாரிப்பார்கள். அப்போது தகுதியானவர்கள் பெயர் பட்டியல் தயாரிக்கப்படும். பின்னர் மாநில தலைவர் ஒப்புதலுடன் புதிய நிர்வாகிகள் நியமிக்கப்படுவார்கள். இந்த பணிகளை இன்னும் 2 மாதத்தில் முடிக்க திட்டமிட்டுள்ளார்கள்.

வட்டார, நகர, பேரூர் தலைவர்களை பொறுத்தவரை சுமார் ஆயிரம் பேர் பொறுப்புக்கு வருவார்கள். புதிய ரத்தம் பாய்ச்சும் போது கட்சி வளர்ச்சி அடையும் என்று கட்சி நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

அதே நேரம் மாநில நிர்வாகிகள் எப்போது நியமிக்கப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது. ஏனெனில் மாநில நிர்வாகிகள் நியமித்து சுமார் 8 வருடங்கள் ஆகி விட்டது. எனவே மாநில நிர்வாகிகளையும் விரைவில் நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முதலமைச்சர் விஜய் குறித்து அவதூறு பேச்சு - விளாத்திகுளம் திமுக எம்.எல்.ஏ. கைது!



தூத்துக்குடி, ஜூலை. 20–

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் திமுக சார்பில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் பேசியபோது, சட்டமன்றத்தை கூட்டும்போது உனக்கு (முதலமைச்சர் விஜய்) எலும்பு இருக்காது உடைத்து விட்டு தான் அனுப்பி விடுவோம் சட்டமன்றத்தை கூட்டிப்பார் என்று பேசி இருந்தார்.

முதலமைச்சர் விஜய்யை குறித்து விமர்சித்தும், சர்ச்சைக்குரிய வகையிலும், மிரட்டும் தொனியிலும் பேசிய வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. இதைத்தொடர்ந்து திமுக எம்.எல்.ஏ.வின் பேச்சுக்கு கடும் கண்டனங்கள் எழுந்து ள்ளன. விளாத்திக்குளம் எம்எல்ஏ மார்க்கண்டேயனின் இந்த பேச்சு சர்ச்சையான நிலையில் அவர் மீது நடவடி க்கை எடுக்க வேண்டும் என்று தமிழக வெற்றிக்கழகம் நிர்வாகிகள் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

# விக்ரம்-1 திட்டத்தில் வெற்றி பெற்ற ஸ்கைரூட்டின் அடுத்த மெகா திட்டம்!



புதுடில்லி, ஜூலை. 20–

'ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்' நிறுவனத்தின் இணை இயக்குநர் பவன் குமார் சந்தனா கூறியதாவது: ராக்கெட் ஏவுதலுக்கான தேவை தற்போது அதிகமாக இருக்கிறது.

அரசின் திட்டங்கள் நிறுவனத்திற்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்கக்கூடும். இந்தியாவின் செயற்கைக்கோள் கூட்டமைப்புத் திட்டங்கள் (satellite constellation plans) உள்நாட்டு ஏவுதலை கணிசமாக அதிகரிக்க வழி வகுக்கும்.

முதலில் நாங்கள் தரவுகளிலிருந்து கற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில் மேம்பாடுகளைச் செய்து, மேலும் பல விண்வெளிப் பயணங்களை மேற்கொள்ள வேண்டும். வரும் 2027ம் ஆண்டு முதல் மாதத்திற்கு ஒரு 'விக்ரம்–1' ராக்கெட்டை ஏவும் வகையிலான உற்பத்தித் திறனை எட்டுவதை நாங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம். முதல் ஏவுதலைப் பொறுத்தவரை, ராக்கெட் புறப்பட்டு ஏவுதளத்தைக் கடந்து செல்வதே முதன்மை யான நோக்கமாக இருந்தது. ஆனால் நாங்கள் சுற்றுப்பாதை வரை சென்று செயற்கைக்கோள்களை நிலைநிறுத்தினோம். எனவே, இது 100% வெற்றிகரமான பயணம் என்று நான் கருதுகிறேன். இதன் தாக்கம் பரவலாக உணரப்படுகிறது.

விக்ரம்–1ன் வெற்றி இந்திய நிறுவனங்களின் திறனை வெளிப்படுத்துகிறது. பல்வேறு சவால்களைக் கடந்து, சுற்றுப்பாதையை அடையும் திறனை ஒரு இந்திய நிறுவனத்தால் பெற முடியும் என்பதை இது காட்டுகிறது. இவ்வாறு பவன்குமார் சந்தானா கூறினார்.

# சென்னை காசிமேடு அமோனியா வாயு கசிவு... பெரும் விபத்து தவிர்ப்பு!



சென்னை, ஜூலை. 20–

சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் உள்ள தனியார் ஐஸ் தொழிற்சாலையில் ஞாயிற்று க்கிழமை இரவு அமோனியா வாயு கசிவு ஏற்பட்டதால் பரபரப்பு நிலவியது. தகவல் கிடைத்ததும் ராயபுரம் தீயணைப்புத் துறையினர் விரைந்து சென்று வாயுக் கசிவை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். தொடர்ந்து, காவல்துறையினர் பாதுகாப்பு வேலிகள் அமைத்து, பொது மக்கள் மற்றும் மீனவர்கள் அப்பகுதிக்குள் செல்ல தடை விதித்தனர். கடந்த ஜூன் மாதம் திருவள்ளூர் மாவ ட்டத்தில் அமோனியா வாயு கசிவால் 18 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்த நிலையில், மீண்டும் ஏற்பட்டுள்ள இந்த சம்பவம் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இரவு நேரத்தில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்ததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது என அதி காரிகள் தெரிவித்துள்ளனர். அமோனியா கசிவுக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# போதை இல்லா இந்தியா: இளைஞர்களுக்கு மத்திய அரசின் தேசிய போட்டி!





புதுடெல்லி, ஜூலை. 20–

இளைஞர்களிடையே போதைப்பொருள் மற்றும் மதுப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், மத்திய அரசின் MY Bharat அமைப்பு சார்பில் "Nasha Mukt Yuva for Viksit Bharat" தேசிய விழிப்புணர்வு இயக்கம் நடைபெற்று வருகிறது. இந்த இயக்கம் ஜூன் 26 முதல் ஆகஸ்ட் 15 வரை நடைபெறுகிறது. 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் MY Bharat இணையதளத்தில் பதிவு செய்து பங்கேற்கலாம்.

மாவட்ட அளவில் நாட்டுப்புறப் பாடல், நடனம், மைம்/தெருநாடகம், ஓவியம், பேச்சுப் போட்டி, குறும்படம் அல்லது ரீல்ஸ் தயாரித்தல், முழக்க வாசகம் எழுதுதல், ஸ்லாம் கவிதை உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன.

மாவட்ட அளவில் வெற்றி பெறுவோர் மாநிலப் போட்டிக்கும், அங்குத் தேர்வாகும்வர்கள் ஆகஸ்ட் 14–ம் தேதி புதுடெல்லியில் நடைபெறும் தேசிய "நஷா முக்த் யுவா" மாநாட்டில் தங்கள் மாநிலத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பைப் பெறுவார்கள். பள்ளி, கல்லூரி மாணவர்கள், NSS, NCC, பாரத் சாரணர்–சாரணியர், MY Bharat தன்னார்வலர்கள், இளைஞர் மன்றங்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இதில் பங்கேற்கலாம். மேலும் விவரங்களுக்கு 7012403155 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# திருமணம் எப்படி அமையும்? ஜாதகம் சொல்வது என்ன?



வேத ஜோதிடத்தின் படி, ஒருவரின் ஜாதகத்தில் உள்ள 7, 8 மற்றும் 11–ஆம் வீடுகளின் அமைப்பும், சுக்கிரன் மற்றும் குருவின் நிலையும் திருமண வாழ்க்கை குறித்த சில அறிகுறிகளை வழங்கும் என ஜோதிட நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும், இதை முழுமையான எதிர்கால கணிப்பாக அல்லாமல், ஒரு வழிகாட்டியாக மட்டுமே பார்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

ஜாதகத்தில் 7–ஆம் வீடு வாழ்க்கைத் துணையின் குணநலன், திருமண உறவு மற்றும் தம்பதியர் வாழ்க்கையை குறிக்கிறது. 8–ஆம் வீடு திருமணத்திற்குப் பிந்தைய பொருளாதார நிலை, குடும்ப ஆதரவு மற்றும் வாழ்க்கை நிலைத்தன்மையை எடுத்துக்காட்டுகிறது. 11–ஆம் வீடு வருமானம், லாபம் மற்றும் நிதி முன்னேற்றத்தை குறிக்கும் இடமாக கருதப்படுகிறது.

சுக்கிரன் ரிஷபம், துலாம் போன்ற தனது ஆட்சி ராசிகளிலோ அல்லது மீனத்தில் உச்ச நிலையில் இருந்தாலோ, திருமணம் ஆடம்பரமாகவும் சிறப்பாகவும் நடைபெறும் என கூறப்படுகிறது. அதேபோல், 7 மற்றும் 11–ஆம் வீடுகள் வலுவாக இருந்தால், திருமணத்திற்குப் பிறகு பொருளாதார முன்னேற்றமும், வாழ்க்கைத் துணையின் வருமான உயர்வும் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக ஜோதிடர்கள் குறிப்பிடுகின்றனர்.

குரு 7–ஆம் வீட்டில் அல்லது அதற்கு சாதகமான நிலையில் இருந்தால், திருமண வாழ்க்கை வளமாக அமையும், குடும்பத்தில் நிம்மதியும், வளர்ச்சியும் ஏற்படும் என நம்பப்படுகிறது. 8–ஆம் வீடு வலுவாக இருந்தால், வாழ்க்கைத் துணையிடமிருந்து உணர்வுபூர்வ மற்றும் பொருளாதார ஆதரவு கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

மேலும், 7 அல்லது 11–ஆம் வீட்டில் ராகு அமைந்திருந்தால், திருமணத்திற்குப் பிறகு திடீர் பொருளாதார முன்னேற்றம் அல்லது சமூக உயர்வு ஏற்படலாம் என்ற கருத்தும் உள்ளது.

எனினும், இந்த மூன்று வீடுகளை மட்டும் வைத்து திருமண பலனை முடிவு செய்ய முடியாது. முழு ஜாதக அமைப்பையும் ஆய்வு செய்த பிறகே சரியான மதிப்பீடு செய்ய முடியும். எனவே, ஜோதிடத்தை எதிர்காலத்தை உறுதியாகக் கூறும் முறையாக அல்லாமல், வழிகாட்டும் கருவியாக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று ஜோதிட நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.

# மாநிலப் பணிக்கு ராஜேஷ் லக்கானி!




சென்னை, ஜூலை 20:


மத்திய அரசுப் பணியில் இருந்த மூத்த ஐஏஎஸ் அதிகாரி ராஜேஷ் லக்கானி, தனது பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்பே மீண்டும் தமிழக மாநிலப் பணிக்கு மாற்றப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவுக்கு மத்திய அமைச்சரவையின் நியமனக் குழு (ACC) ஒப்புதல் அளித்துள்ளது.

1992–ஆம் ஆண்டு தமிழகப் பிரிவு ஐஏஎஸ் அதிகாரியான ராஜேஷ் லக்கானி, மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நவோதயா வித்யாலயா சமிதியின் ஆணையராக (இணைச் செயலர் அந்தஸ்து) பணியாற்றி வந்தார். தனிப்பட்ட காரணங்களுக்காக மாநிலப் பணிக்குத் திரும்ப அனுமதி கோரியிருந்த நிலையில், அவரது கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், சுற்றுலாத் துறை செயலர், தலைமைத் தேர்தல் அதிகாரி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர், தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் உள்ளிட்ட பல முக்கிய பொறுப்புகளை ராஜேஷ் லக்கானி வகித்துள்ளார்.

தற்போதைய தலைமைச் செயலாளர் எம். சாய் குமார் 2027 பிப்ரவரியில் ஓய்வு பெற உள்ள நிலையில், ராஜேஷ் லக்கானியின் மாநிலப் பணிக்குத் திரும்புதல் நிர்வாக வட்டாரத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அவர், அடுத்த தலைமைச் செயலாளர் பதவிக்கான முக்கிய மூத்த அதிகாரிகளில் ஒருவராகக் கருதப்படுவதால், இந்த மாற்றம் அரசியல் மற்றும் நிர்வாக வட்டாரங்களில் கவனத்தை ஈர்த்துள்ளது.

# வார தொடக்கத்தில் உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, ஜூலை. 20–

வார தொடக்க நாளான இன்று தங்கம் விலை உயர்ந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு 15 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.13,150–க்கும் சவரனுக்கு 120 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்றும் மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.235–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.




## மூச்சு வாங்குதா? நுரையீரல் ஆரோக்கியத்தை வீட்டிலேயே தெரிந்துகொள்ளலாம்!




சில படிக்கட்டுகள் ஏறியவுடன் மூச்சுத் திணறல் ஏற்படுகிறதா? சிறிது தூரம் நடந்தாலே அதிக சோர்வும், மூச்சு வாங்குவதும் இருக்கிறதா? அப்படியானால், நுரையீரலின் செயல்திறனை அலட்சியப்படுத்தாமல் பரிசோதிக்க வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

மருத்துவர் ஷரோன் கூறுகையில், நுரையீரல் ஆரோக்கியத்தை ஆரம்ப கட்டத்திலேயே அறிய வீட்டிலேயே ஒரு எளிய சோதனை செய்யலாம் என தெரிவித்துள்ளார். அமைதியாக அமர்ந்து ஆழமாக மூச்சை இழுத்து, அதை 20 விநாடிகள் அல்லது அதற்கு மேல் சிரமமின்றி தக்க வைத்திருக்க முடியவில்லை என்றால், அது நுரையீரல் செயல்பாடு குறைந்து வருவதற்கான ஒரு அறிகுறியாக இருக்கலாம். இருப்பினும், இந்த சோதனை மட்டும் நோயை உறுதிப்படுத்தாது; சந்தேகம் இருந்தால் மருத்துவரின் பரிசோதனை அவசியம்.

மேலும், வழக்கமான வேலைகளைச் செய்யும்போதோ, சில படிக்கட்டுகள் ஏறும்போதோ அல்லது குறுகிய தூரம் நடந்தாலோ மூச்சுத் திணறல் ஏற்படுவது போன்ற அறிகுறிகளை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இவை சுவாசக் குழாய் அல்லது நுரையீரல் தொடர்பான பிரச்சனைகளின் ஆரம்ப எச்சரிக்கை அறிகுறிகளாக இருக்கலாம்.

நுரையீரலை ஆரோக்கியமாக வைத்திருக்க புகைப்பிடிப்பதைத் தவிர்ப்பது, தூய்மையான காற்றை சுவாசிப்பது, தினசரி உடற்பயிற்சி செய்வது, சத்தான உணவு உட்கொள்வது மற்றும் உடலில் ஏற்படும் மாற்றங்களை கவனிப்பது மிகவும் முக்கியம். மூச்சுத் திணறல், நீடித்த இருமல் அல்லது சுவாச சிரமம் தொடர்ந்து இருந்தால், தாமதிக்காமல் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெறுவது, பல நுரையீரல் நோய்களை கட்டுப்படுத்தவும், சுவாச ஆரோக்கியத்தை நீண்ட காலம் பாதுகாக்கவும் உதவும் என மருத்துவர்கள் வலியுறுத்துகின்றனர்.



## சினிமா துளிகள்..!

## 'ஜனநாயகன்' டிக்கெட் முன்பதிவு தொடக்கம்!




முதலமைச்சர் விஜய் நடித்துள்ள 'ஜனநாயகன்' திரைப்படத்தின் டிக்கெட் முன்பதிவு தமிழ்நாட்டில் அதிகாரப்பூர்வமாக தொடங்கியுள்ளது. ஏற்கனவே அண்டை மாநிலங்களில் முன்பதிவு தொடங்கிய நிலையில், தற்போது தமிழக ரசிகர்களும் ஆர்வத்துடன் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து வருகின்றனர். தகவல்களின்படி, படம் உலகம் முழுவதும் 3,000–க்கும் மேற்பட்ட திரைகளில் வெளியாக உள்ளது. சுமார் 3 மணி நேரம் 3 நிமிடங்கள் ஓடும் இந்த திரைப்படம் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தயாரிப்பு நிறுவனம் முன்பதிவு தொடங்கியதை அதிகாரப்பூர்வமாக அறிவித்ததைத் தொடர்ந்து, திரையரங்குகளில் முதல் நாள் காட்சிக்கான டிக்கெட்டுகள் வேகமாக விற்பனையாகி வருகின்றன.

## திரைப்பட எழுத்தாளர் சங்கத் தலைவர் தேர்தல்: சேரன் அணி வெற்றி!



தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர் சங்கத்தின் 2026 2029 காலத்திற்கான தேர்தலில், இயக்குநர் சேரன்தலைமையிலான 'நம்ம பாக்யராஜ்' அணி வெற்றி பெற்றுள்ளது.

முன்னாள் தலைவர் கே. பாக்யராஜ் மறைவால் ஒத்திவைக்கப்பட்டிருந்த தேர்தல், ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடைபெற்றது. காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற்றது. தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட இயக்குநர் சேரன், 12 தபால் வாக்குகள் உட்பட 279 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட வி.சி. குகநாதன் 155 வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வியடைந்தார். மேலும், துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட சமுத்திரகனி மற்றும் சினேகன் ஆகியோரும் 'நம்ம பாக்யராஜ்'அணி சார்பில் வெற்றி பெற்றுள்ளனர். தேர்தல் முடிவால் அந்த அணியினர் உற்சாகத்தில் கொண்டாடினர்.

# சி.வி.சண்முகம் ஆதரவாளர்கள் 1000 பேர் ராஜினாமா!



சென்னை, ஜூலை. 20–
விழுப்புரம் மாவட்ட புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட பசுபதி தரப்பினருக்கும், சி.வி. சண்முகம் ஆதரவாளர்களுக்கும் இடையே அடிக்கடி பிரச்சனைகள் ஏற்பட்டு வருகிறது.

தொடர்ந்து மோதல் போக்கு நீடித்த நிலையில் கடந்த 16–ந்தேதி சி.வி. சண்முகத்தின் ஆதரவாளர்கள் 11 பேரின் கட்சி பதவிகளை பறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நடவடிக்கை எடுத்தார். இந்த நிலையில், திண்டிவனம் முன்னாள் எம்.எல்.ஏ. அர்ஜூனன் தலைமையில் மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் என 1000–த்திற்கும் மேற்பட்ட சி.வி.சண்முகம் ஆதரவாளர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளனர். தங்களது ராஜினாமா கடிதத்தை சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்துக்கு சென்று கொடுக்க திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி இன்று காலை முன்னாள் எம்.எல்.ஏ. அர்ஜூனன் தலைமையில் சி.வி.சண்முகம் ஆதரவாளர்கள் 1000–த்திற்கும் மேற்பட்டோர் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் திரண்டனர்.

பின்னர் அவர்கள் 5 வேன்கள், 50–க்கும் மேற்பட்ட கார்களில் சென்னை நோக்கி புறப்பட்டனர். சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க தலைமை அலுவலகத்துக்கு செல்லும் அவர்கள் அங்கு தங்களது பதவிகளை ராஜினாமா செய்ய உள்ளனர்.

முன்னதாக அவர்கள் மெரினாவில் உள்ள எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா சமாதிக்கு நேரில் சென்றும் முறையிட இருக்கிறார்கள். சி.வி.சண்முகம் ஆதரவாளர்களின் இன்றைய சென்னை பயணம் அ.தி.மு.க.வில் மீண்டும் சலசலப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# என்ஜினீயரிங் படிப்புக்கான பொது கலந்தாய்வு தொடக்கம்!



சென்னை, ஜூலை. 20–
என்ஜினீயரிங் படிப்புக்கான கலந்தாய்வு கடந்த 13–ந்தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. அதன்படி, கடந்த 15–ந்தேதி முதல் 18–ந்தேதி வரை சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு நடந்தது. இதில் விளையாட்டு பிரிவில் 3 ஆயிரத்து 210 பேரும், மாற்றுத்திறனாளிகள் பிரிவில் 500 பேரும், முன்னாள் ராணுவத்தினரின் பிள்ளைகள் பிரிவில் 1,176 பேரும் விண்ணப்பித்திருந்தனர்.

அவர்களுக்கான கலந்தாய்வு நேற்று முன்தினம் நிறைவு பெற்ற நிலையில், மாற்றுத்திறனாளிகள் பிரிவில் 258 பேரும், விளையாட்டுப் பிரிவில் 416 பேரும், முன்னாள் ராணுவத்தினரின் பிள்ளைகள் பிரிவில் 139 பேரும் என மொத்தம் 813 பேருக்கு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன.

இதனைத்தொடர்ந்து பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு ஜூலை. 20 (திங்கட்கிழமை) முதல் தொடங்கி நடைபெற இருக்கிறது. ஆன்லைன் மூலம் இந்த கலந்தாய்வு நடைபெறுகிறது. மொத்தம் 3 சுற்றுகளாக கலந்தாய்வு நடக்க இருக்கும் நிலையில், முதல் சுற்று கலந்தாய்வு இன்று தொடங்கி அடுத்த மாதம் (ஆகஸ்டு) 3–ந்தேதி வரை நடைபெற இருக்கிறது. இதில் பொது தரவரிசையில் 1 முதல் 37,976 வரையிலான இடங்களில் உள்ள மாணவ–மாணவிகள் பங்கேற்க இருக்கின்றனர்.

2–வது சுற்று கலந்தாய்வு அடுத்த மாதம் 3–ந்தேதி தொடங்கி 17–ந்தேதி வரையில் நடக்கிறது. அதில் பொது தரவரிசையில் இடம்பெற்ற 37,977 முதல் 1,31,093 வரையிலான மாணவ–மாணவிகள் பங்கேற்கிறார்கள். 3–வது சுற்று கலந்தாய்வு அடுத்த மாதம் 17–ந்தேதி தொடங்கி 31–ந்தேதியுடன் நிறைவு பெறுகிறது. அதில் பொது தரவரிசையில் 1,31,094 முதல் 2,33,812 வரையில் இடம்பெற்றவர்கள் பங்கேற்க உள்ளனர்.

# அகில இந்திய பார் கவுன்சில் தேர்வு முடிவு!





புதுடெல்லி, ஜூலை. 20–
சட்டப்படிப்பை முடித்து பார் கவுன்சிலில் பதிவு செய்தவர்கள் வக்கீலாக பணியாற்றுவதற்காக இந்திய பார் கவுன்சில் அகில இந்திய வக்கீல்கள் தேர்வை அவ்வப்போது நடத்தி வருகிறது.

இந்த தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள், இந்தியாவில் உள்ள எந்தவொரு கோர்ட்டிலும் வக்கீலாக பணியாற்றும் தகுதியை பெறுகிறார்கள்.

அந்தவகையில் கடந்த மாதம் 7–ந்தேதி இந்த தேர்வு நடந்தது. இந்தியா முழுவதும் 292 மையங்களில் நடந்த இந்த தேர்வில் 1 லட்சத்து 10 ஆயிரத்து 909 ஆண்கள், 64 ஆயிரத்து 78–பெண்கள், 8 திருநங்கைகள் என மொத்தம் 1 லட்சத்து 75 ஆயிரத்து 701 பேர் பங்கேற்றனர். தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.

இதில் ஆண்களில் 73 ஆயிரத்து 45 பேர், பெண்களில் 42 ஆயிரத்து 757 பேர். திருநங்கைகள் 3 பேர் என மொத்தம் 1 லட்சத்து 15 ஆயிரத்து 805 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 59 ஆயிரத்து 876 பேர் (ஆண்கள்–37,849, பெண்கள்– 22,022, திருநங்கைகள்–5) தோல்வியை தழுவினர். முறைகேட்டில் ஈடுபட்ட 20 பேரின் தேர்வு முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டன. தமிழகத்தை பொறுத்தமட்டில் 2,469 பேர் இத்தேர்வை எழுதிய நிலையில் 581 பேர் தோல்வி அடைந்தனர். அடுத்த தேர்வு நவம்பர் 29–ந்தேதி நடைபெறும் என்றும், இதற்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு அடுத்த மாதம் (ஆகஸ்டு) 19–ந் தேதி தொடங்கும் என்றும் பார் கவுன்சில் அறிவித்துள்ளது.

## திருச்சியில் இருந்து பெங்களூருவுக்கு விமான கட்டணம் குறைப்பு!



திருச்சி, ஜூலை. 20–
திருச்சி விமான நிலையத்தில் இருந்து உள்நாட்டு விமான சேவைகளாக சென்னை, பெங்களூரு, ஐதராபாத், புதுடெல்லி, மும்பை உள்ளிட்ட நகரங்களுக்கு விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த விமான சேவைகளில் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம் திருச்சியில் இருந்து பெங்களூருக்கு ஒரு வழிப்பாதை சேவை கட்டணத்தை ரூ.3000 ஆக நிர்ணயம் செய்துள்ளது.

இந்த கட்டணமானது இன்று (திங்கட்கிழமை) முதல் 24–ந்தேதி வரை தொடரும் என்று அறிவித்துள்ளது. இதனால் பயணிகள் குறைந்த செலவில் திருச்சியில் இருந்து பெங்களூருக்கு ஒரு வழி கட்டணமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

## சல்மான் கானுக்கு என்ன ஆச்சு? ரசிகர்கள் அதிர்ச்சி!



பாலிவுட் நடிகர் சல்மான் கான் அண்மையில் மும்பையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது, வழக்கத்தை விட மிகவும் மெலிந்த மற்றும் மாறுபட்ட தோற்றத்தில் காணப்பட்டார். அந்த நிகழ்ச்சியின் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி, ரசிகர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

60 வயதான சல்மான் கானின் இந்த தோற்றத்தைப் பார்த்த ரசிகர்கள், "அவருக்கு என்ன ஆச்சு? உடல்நிலை சரியில்லையா?" என்று சமூக வலைதளங்களில் கேள்வி எழுப்பி வருகின்றனர். அதேசமயம், சிலர் இது வயதுக்கேற்ற இயல்பான மாற்றம் என்றும் கருத்து தெரிவித்து வருகின்றனர். இதுவரை அவரது உடல்நிலை குறித்து அதிகாரப்பூர்வ விளக்கம் எதுவும் வெளியாகவில்லை.

## லண்டன் பயணம் நிறைவு: திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் சென்னை வருகை!



சென்னை, ஜூலை. 20–
லண்டன் சென்ற மு.க.ஸ்டாலின் கடந்த 14–ந்தேதி அன்று பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றார். பட்டம் பெற்ற பேரன் இன்பநிதியை கட்டியணைத்து வாழ்த்தினார்.

இந்த நிலையில் மு.க.ஸ்டாலின் 2 வார கால லண்டன் பயணத்தை முடித்துகொண்டு இன்று இரவு சென்னை திரும்பினார் அப்போது அவருக்கு பொன்னாடை, புத்தகங்கள் வழங்கி முன்னாள் அமைச்சர்கள் வரவேற்றனர். தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் வரவேற்பு கோஷங்கள் எழுப்பி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## தேர்தல் தோல்வி: எடப்பாடி பழனிசாமி மீண்டும் ஆலோசனை!



சென்னை, ஜூலை. 20–
அ.தி.மு.க. தலைமை கழகத்தில் எடப்பாடி பழனிசாமி இன்று முதல் தொடர்ச்சியாக 5 நாட்கள் மீண்டும் ஆலோசனை மேற்கொள்கிறார். இன்றைய கூட்டத்தில் மதுரை, ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாளை தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகளுடனும், 22–ந்தேதி திருப்பூர், நாமக்கல், வட சென்னை மாவட்ட நிர்வாகிகளுடனும் 23–ந்தேதி கோவை, திண்டுக்கல், வட சென்னை மாவட்ட நிர்வாகிகளுடனும் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை மேற்கொள்கிறார்.

24–ந்தேதி விழுப்புரம், திருவாரூர், சேலம் மாவட்ட நிர்வாகிகளும் 25–ந்தேதி கள்ளக்குறிச்சி மற்றும் சென்னை, திருவள்ளூர் தெற்கு மாவட்ட நிர்வாகிகளும் ஆலோசனை கூட்டங்களில் கலந்து கொள்கிறார்கள்.

# வேலை வாய்ப்பு

## மத்திய அரசு ONGC–யில் 52 நிரந்தர பணியிடங்கள்!




மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் (ONGC), 52 புவியியலாளர் (Geologist) மற்றும் பொறியாளர் (Engineer) பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்த பணியிடங்கள் E1 நிலை நிரந்தர (Regular) பணியிடங்களாகும். B.E./B.Tech., M.Sc., M.Tech. தகுதி பெற்றவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம். தேர்வு செய்யப்படும் பணியாளர்கள் இந்தியா முழுவதும்பணியமர்த்தப்படுவார்கள்.

**முக்கிய விவரங்கள்:**

நிறுவனம்: ONGC எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்
அறிவிப்பு எண்: 2/2026 (R&P)
பணியிடங்கள்: 52
பதவிகள்: புவியியலாளர், பொறியாளர் (E1 நிலை)
பணி வகை: நிரந்தர பணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
பணியிடம்: இந்தியா முழுவதும்
முக்கிய தேதிகள்:
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 17.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.07.2026 இரவு 11.59 மணி

தேர்வுக்கு பதிவு செய்தவர்களுக்கு, தேர்வு நுழைவுச்சீட்டு மற்றும் நேர்காணல் அழைப்புக் கடிதம் தேர்வுக்கு 3 முதல் 7 நாட்களுக்கு முன்பு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

விண்ணப்பதாரர்கள் வயது வரம்பு, சம்பள விவரம், தேர்வு முறை, விண்ணப்பக் கட்டணம் உள்ளிட்ட முழு விவரங்களை ONGC–யின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அறிந்து, கடைசி தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: www.ongcindia.com

## ரஷ்யாவை உலுக்கிய உக்ரைன்!



ரஷ்யா, ஜூலை. 20–
ரஷ்யாவின் ஸ்டாவ்ரோபோல் கிராய் பகுதியில் உள்ள 3 எண்ணெய் மற்றும் எரிபொருள் சேமிப்பு கிடங்குகள் மீது உக்ரைன் நீண்ட தூர ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. தாக்குதலால் கிடங்குகளில் தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

உக்ரைனிலிருந்து சுமார் 1,200 கி.மீ. தொலைவில் உள்ள இந்த இலக்குகள் தாக்கப்பட்டிருப்பது, உக்ரைனின் நீண்ட தூர தாக்குதல் திறனை வெளிப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. ரஷ்யாவின் எண்ணெய் உள்கட்டமைப்புகளை தொடர்ந்து குறிவைத்து உக்ரைன் தாக்குதல் நடத்தி வருவதால், இரு நாடுகளுக்கும் இடையிலான போர் பதற்றம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

## சுருளி அருவிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல வனத்துறை தடை!




தேனி, ஜூலை. 20–
நீர்வரத்தின்றி வறண்டு காணப்படுவதால் சுருளி அருவிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது. மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலாப் பயணிகள் சுருளி அருவிக்கு வருகை தர வேண்டாம் என வனத்துறை அறிவித்துள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## ஈரானுக்கு பயணம் செய்வதை தவிர்க்க இந்தியர்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்!

டெல்லி, ஜூலை 20–

இந்தியர்கள் ஈரானுக்கு பயணம் செய்வதை தவிர்க்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக ஈரானுக்கு செல்வதை தவிர்க்குமாறு மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேலும், ஈரானில் உள்ள இந்தியர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.





பாட்டாளி மக்கள் கட்சியின் 19–வது வேளாண் நிழல் நிதிநிலை அறிக்கையை, அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் சென்னை தி.நகரில் உள்ள தனியார் ஹோட்டலில் வெளியிட்டார்.

## மேற்கு வங்காளத்தில் உலகின் மிகப்பெரிய தயிர் உற்பத்தி ஆலை!

கொல்கத்தா, ஜூலை. 20–

மேற்கு வங்காள மாநிலம் ஹவுரா மாவட்டம் சங்க்ராயிலில், அமுல் நிறுவனத்தின் வங்காள



பால் பண்ணை திட்டம் தொடங்கப்பட்டது. ரூ.700 கோடி மதிப்பிலான இந்த திட்டத்தில் உல கின் மிகப்பெரிய தயிர் உற்பத்தி ஆலை நிறுவப்பட உள்ளது. மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்த தொழிற்சாலையில் தினமும் 30 லட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தி, 10 லட்சம் கிலோ தயிர் மற்றும் பிற பால் பொருட்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இந் தத் திட்டத்தால் சுமார் 1.25 லட்சம் பால் உற்பத்தியாளர்கள், குறிப்பாக 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைவார்கள் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அமித்ஷா பேசும்போது, "மேற்கு வங்கத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் சுதந்திரத்துக்குப் பிறகு இல்லாத ஒன்று. பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு. 'சோனார் பங்களா' (பொன்னான வங்கா ளம்) என்ற கனவை மீண்டும் நனவாக்கும் முயற்சி தொடங்கி உள்ளது" என்று கூறினார்.

## லக்னோவில் 12 மாடி அரசு கட்டிடத்தில் பெரும் தீ விபத்து..!

லக்னோ, ஜூலை. 20–



உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவில் ஹசரத்கஞ்ச் பகுதியில் உள்ள 12 மாடி அரசு கட்டிடமான ஜவஹர் பவன்–இல் இன்று காலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அரசு அலுவலக ஊழியர்கள் இன்றைய பணிகளை துவங்கிய சில நிமிடங்களில் காலை சுமார் 10 மணியளவில் கட்டிடத்தின் மேல் தளங்களில் ஒன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

ஜவஹர் பவன் கட்டிடத்தின் 4–வது மாடியில் உள்ள உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலகம் மற்றும் கேன்டீன் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தீ விபத்தை தொடர்ந்து அலுவலக ஊழியர்களும், பொதுமக்களும் ஜவஹர் பவன் கட்டிடத்தை விட்டு உடனடியாக வெளியேற்றப்பட்டனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பல தீயணைப்பு வாகனங்கள், தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டன. விரைந்து செயல்பட்டு, கடுமையான போராட்டத்திற்குப் பிறகு தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர் தீயணைப்பு துறையினர். அதிர்ஷ்டவசமாக, இந்த விபத்தில் எந்தவித உயிர்ச்சேதமோ அல்லது யாருக்கும் காயங்களோ ஏற்படவில்லை. லக்னோ மாநகராட்சி மேயர் சுஷ்மா கர்க்வால் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று நிலைமையை ஆய்வு செய்துள்ளார்.

லக்னோவின் தலைமை தீயணைப்பு அதிகாரி அங்குஷ் மிட்டல் பேசுகையில், தீதற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், கட்டிடத்திற்குள் இருந்த அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவித்தார். தீ விபத்திற்கான காரணம் குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## விமான எரிபொருள் வரி குறைகிறதா? தமிழக அரசின் முக்கிய முடிவு!



சென்னை, ஜூலை. 20–


தமிழகத்தில் விமானப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில், விமான எரிபொருள் (ATF) மீதான 29% மதிப்புக் கூட்டு வரியை (VAT) குறைக்க தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. இதற்கான அறிவிப்பு அடுத்த மாதம் தாக்கல் செய்யப்படும் மாநில பட்ஜெட்டில் வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது. மத்திய அரசு கடந்த சில மாதங்களாக விமான எரிபொருள் மீதான வரியை குறைக்க மாநில அரசுகளை தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. விமான நிறுவனங்களின் முக்கிய செலவாக ATF இருப்பதால், வரி குறைக்கப்பட்டால் விமான சேவை செலவு குறைவதுடன், பயணிகளுக்கும் கட்டண சலுகை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது தமிழ்நாட்டில் ATF–க்கு 29% VAT விதிக்கப்படுகிறது. அதே நேரத்தில், ஆந்திரப் பிரதேசத்தில் 1%, கேரளத்தில் 5% விற்பனை வரி மற்றும் 1% செஸ், கர்நாடகாவில் 18%, தெலங்கானாவில் 16%, புதுச்சேரியில் 14.5% வரி மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இந்த வேறுபாட்டை கருத்தில் கொண்டு, அண்டை மாநிலங்களுக்கு இணையான வரி விகிதத்தை நிர்ணயிக்க தமிழக அரசு ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

சமீபத்தில் மகாராஷ்டிரா மற்றும் டெல்லி அரசுகளும் ATF மீதான வரியை 7% ஆகக் குறைத்துள்ளன. இதனால் தமிழகமும் போட்டித்தன்மையை உயர்த்தும் நோக்கில் வரி குறைப்பை பரிசீலிப்பதாக கூறப்படுகிறது.

இந்த வரி குறைப்பு அமலுக்கு வந்தால், விமான நிறுவனங்களின் செயல்பாட்டு செலவு குறைய வாய்ப்புள்ளது. அதே நேரத்தில், மாநில அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பது முக்கிய கேள்வியாக எழுந்துள்ளது.

## பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய சுற்றுலாத்துறை திட்டங்கள் குறித்து முதல்வர் விஜய் ஆலோசனை!!



சென்னை. ஜூலை. 20–

பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய சுற்றுலாத்துறை திட்டங்கள் குறித்து முதலமைச்சர் விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். தலைமைச் செயலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார், உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். சூழல் சுற்றுலா, பண்பாட்டு சுற்றுலா திட்டங்களை தொடங்குவது குறித்தும் ஆலோசனை நடைபெற்று வருகிறது.

## அமெரிக்காவின் ரகசிய திட்டம்..! வெயிட் அண்ட் சி என ஈரான் நேரடி சவால்!



தெஹ்ரான், ஜூலை. 20–

அமெரிக்காவுக்கு எதிராக ஈரான் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளது. ஈரானின் புரட்சிகர காவல்படை தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்கப் படைகளின் நடமாட்டத்தையும் ராணுவ உபகரணங்களையும் ஈரானின் கடற்படை பிரிவு தொடர்ந்து தீவிரமாக கண்காணித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஈரானின் பொருளாதாரத்தை பாதிக்கும் அமெரிக்காவின் நடவடிக்கைகளையும் கவனித்து வருகிறோம். மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்காவின் கடற்படை மையங்களுக்கு எதிராக ஈரான் ஆயுதப் படைகள் தயாராக உள்ளன. மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கையின் நேரம் நெருங்கி வருகிறது. "வெயிட் அண்ட் சி" என்று அந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## பழனி முருகன் கோயில் ரோப் கார் சேவை 45 நாட்களுக்கு இயங்காது!



திண்டுக்கல், ஜூலை. 20–

பழனி முருகன் கோவில் ரோப் கார் சேவை, வருடாந்திர பராமரிப்பு பணிகள் காரணமாக பழனி முருகன் கோயில் ரோப் கார் சேவை இன்று முதல் அடுத்த 45 நாட்களுக்கு இயங்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பக்தர்கள் செப்டம்பர் 14ஆம் தேதி வரை ரோப் கார் சேவையை பயன்படுத்த முடியாது. செப்டம்பர் 15ஆம் தேதி வரை முதல் வழக்கம் போல் பழனி முருகன் கோயிலில் ரோப் கார் சேவை இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலகை அதிரவைத்த அமெரிக்க தாக்குதல்!

அமெரிக்கா, ஜூலை. 20–

ஈரான்அமெரிக்கா பதற்றம் தீவிரமடைந்துள்ள நிலையில், தென்மேற்கு ஈரானின் குசெஸ்தான் மாகாணத்தில் கட்டப்பட்டு வரும் டார்கோவின் (Esteghlal) அணுமின் நிலையத்தின் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் அணுசக்தி அமைப்பு, இந்த தாக்குதல் சர்வதேச விதிமுறைகளை மீறுவதாக குற்றம்சாட்டியுள்ளது. 300 மெகாவாட் திறன் கொண்ட இந்த





அணுமின் நிலையம் 2030–ஆம் ஆண்டில் செயல்பட திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கு முன் விமான நிலையம், துறைமுகம், மின்கட்டமைப்பு உள்ளிட்ட முக்கிய இடங்கள் தாக்கப்பட்ட நிலையில், தற்போது அணுமின் நிலையம் இலக்காகியிருப்பது வளைகுடா பகுதியில் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது. ஹார்முஸ் கடல்சந்தியிலும் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மாங்குளம் மீனாட்சிபுரம் கிராமத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இருவகை மலைக் குகைகள் மற்றும் தமிழ் பிராமி கல்வெட்டுகளை பள்ளிக்கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் ஆய்வு மேற்கொண்டார். சுற்றுலா இயக்குநர்–தமிழ் வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் தொல்லியல்துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன், மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் (மதுரை கிழக்கு, திரு.எம்.வி.கருப்பையா (சோழவந்தான்) ஆகியோர் உடன் உள்ளனர்.

## ஏலகிரி கோடை விழா நாய்கள் கண்காட்சி!

ஏலகிரி, ஜூலை. 20–

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி கோடை விழாவின் இரண்டாம் நாளில் நடைபெற்ற நாய்கள் கண்காட்சி பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. வேலூர், கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்களைச் சேர்ந்த 20 இனங்களைச் சேர்ந்த 43 நாய்கள் நான்கு பிரிவுகளில் போட்டியிட்டன. நடுத்தர ரகம் மற்றும் உள்ளூர் இனம் பிரிவுகளில் ஜோலார்பேட்டையைச் சேர்ந்த அருள் உதயராஜன்



முதல் பரிசு பெற்று, ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் வென்றார். வெற்றியாளர்களுக்கு பரிசுகள் மற்றும் பங்கேற்ற அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## இரண்டு நாள் பண்பாட்டுப் பெருவிழா!

தென்காசி, ஜூலை. 20–



இரண்டு நாள் பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் இரவு குற்றாலம் புளியரை பகுதியில் மிகச் சிறந்த அழகிய தோட்டங்கள் நிறைந்த ரம்மியமான சூழலில் திரளி பாரமவுண்ட் டெக்ஸ்டைல் மில்ஸ் நிறுவன த்தின் பிரம்மாண்டமான 'மயிலாலயம் 'பங்களாவில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா. சொக்கலிங்கம் நகைச்சுவை சாரல் நடுவில் கலைத் தந்தை கருமுத்து தியாகராஜன் செட்டியார் அவர்களின் பன்முகப் பேராற்றல் குறித்துப் பேசுகையில் 81 வயது வரை வாழ்ந்த கலைத் தந்தை தனது இருபது வயதில் இலங்கை மார்னிங் லீடர் இதழில் துணை ஆசிரியர் பணியாற்றி தோட்டத் தொழிலாளர்கள் நலன் காத்திடவும், தமிழ்நாட்டு தொழிலாளர்கள் கைகளில் சூடு போட்டு அடையாளம் ஏற்படுத்திய நிலையை ஒழித்த மகத்தான மனிதர். மதுரையில் ஏராளமான நூற்பாலைகள் நிறுவியும் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் நூற்பாலைகள் நடத்தியவர். தனித் தமிழில் தமிழ்நாடு என்ற நாளிதழ் நடத்திய உணர்வாளர்.

அவரது கலை ஆர்வம், கட்டிடக் கலை, இசை ஆர்வம், தோட்டக் கலை, பசு வளர்ப்பு மற்றும் தேசத் தலைவர்கள் மீது கொண்ட பற்று என பன்முகப் பேராற்றலை வளரும் தலைமுறை அறிந்து கொள்ள வேண்டும். இதே குற்றாலத்தில் இறைவன் திருவடி அடையும் வரை தமிழ்நாட்டின் கல்வி மற்றும் தொழில் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட மாமனிதர் கருமுத்து தியாகராஜன் செட்டியார் பணிகளை அவரது பேரப்பிள்ளைகள் இன்று சிறப்பாகச் செய்து வருகின்றனர். கலை அன்னை டாக்டர் ராதா தியாகராஜன் திருவாசகத்தில் மெய்ப் பொருளியல் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர் என்பது கூடுதல் மகிழ்ச்சி எனக் கூறினார். நகைச்சுவை சாரல் என்பது இன்று மனித குலத்திற்கு அவசியமானது. விஞ்ஞான உலகில் நகைச்சுவைக்கு இணையான மருத்துவம் ஒன்றுமில்லை, அதன் பயன் எல்லா வயதினருக்கும் தேவையான ஒன்று என்பதை எடுத்துச் சொல்லி 54 நிமிடங்கள் சிறப்புரை ஆற்றினார். பாரமவுண்ட் குழுமத்தின் தலைவர் கலைத் தந்தையின் மகள் லெட்சுமி முருகேசன் தலைமையில் அதன் மேலாண்மை இயக்குநர் இளைய கலைத் தந்தை ராம் முருகேசன் முன்னிலையில் நடைபெற்றது.

ரோட்டரி சங்கத்தின் மேனாள் ஆளுநர் ஆர். ராஜா கோவிந்தசாமி, மேற்கு ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஆர்த்தி சுரேஷ், மதுரை நகரத்தார் மகளிர் சங்கத்தின் தலைவர் விசாலாட்சி அண்ணாமலை, பிளாசம் ரோட்டரி சங்கத்தின் தலைவர் கௌரி வாழ்த்துரை வழங்கினர். இரு நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஞாயிற்றுக்கிழமை காலை முற்றோதல் நடைபெற்றது. ரோட்டரி சங்கத்தின் பெருமக்கள் குடும்பத்தினர் சூழ பங்கேற்றுச் சிறப்பித்தனர். மதுரை நகரத்தார் மகளிர் சங்கத்தின் பெருமக்கள் ஏராளமானோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். ஏராளமான நூற்பாலை அதிபர்கள், தொழிலதிபர்கள், நண்பர்கள், ஆன்மிகப் பெருமக்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். வருகை தந்த பெருமக்களை ராம் முருகேசன் குடும்பத்தினர் வரவேற்றுச் சிறப்பித்தனர். அமெரிக்க நடேசன் அவர்கள் பேரன் நளபாக நாயகர் ஏசிஎன் பாலு குழுவினர் இரு நாட்கள் மிகச் சிறந்த உணவு ஏற்பாடு. இந்த பிரமாண்டமான பங்களா குறித்து தனி பதிவாக படங்களுடன் ஓரிரு நாட்களில் பதியவிட்டு மகிழ்வேன். வாழிய கலைத் தந்தை கருமுத்து தியாகராஜன் செட்டியார் அவர்களின் திருக் குடும்பம் வாழியவே.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020